## சட்டப்பேரவைத் தேர்தல் – 2026

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் - காணொலி மூலம் அனைத்துத் தொகுதிகளிலும் உள்ள கழக நிர்வாகிகளோடு கலந்துரையாடல்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,** அனைத்து தொகுதிகளிலும் உள்ள கழக நிர்வாகிகளுடன் 03.04.2026 (வெள்ளிக்கிழமை) நண்பகல் 12.00 மணிக்கு காணொலி மூலம் கலந்துரையாடுகிறார்.

அதுபோது, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியளவிலும் ஓரிடத்தில் தக்க ஏற்பாடுகளைச் செய்யும்படி மாவட்டச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர்கள், கழக வேட்பாளர்கள், பகுதி – நகரம் – ஒன்றியம் வட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் தொகுதிக்கான கேட்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.

காணொலி இணைப்பு தலைமைக்கழகத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை – 18.
நாள் : 31.03.2026.

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

### காஞ்சி வடக்கு மாவட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் போட்டியிடும்

# 6 சட்டமன்றத் தொகுதி வேட்பாளர்களும் அமோக வெற்றி பெற அயராது பாடுபடுவோம்!

## மாவட்ட செயல்வீரர்கள் கூட்டத்தில் முடிவு – தா.மோ.அன்பரசன் தகவல்!

காஞ்சிபுரம், ஏப்.1-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் அடங்கியுள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் கூட்டணி வேட்பாளர்களை அமோக வெற்றி பெறச் செய்ய அயராது பாடுபடுவோம் என மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி செயல் வீரர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டவுள்ளதாக மாவட்ட தி.மு.க. செயலாளர் தா.மோ.அன்பரசன் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் அடங்கியுள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் தி.மு.க. கூட்டணிக் கட்சி வேட்பாளர்கள் அறிமுக கூட்டம் மற்றும் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம்நந்திவரம்கூடுவாஞ்சேரியில்நேற்று மாலை 4.00 மணியளவில் என்.பி.ஆர்.திருமண மண்டபத்தில் மாவட்ட தி.மு.க. செயலாளர் தா.மோ. அன்பரசன் தலைமையில் நடைபெற்றது.

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகர தி.மு.க. செயலாளர் எம். கே.டி.கார்த்திக் அனைவரையும் வரவேற்றார்.

மாவட்ட காங்கிரஸ் தலைவர்கள் ஆர்.எஸ்.செந்தில்குமார், கே.வி.திலகர், ஜெ.பி.பிரபு, எஸ்.ஏ.அருள்ராஜ், மாவட்ட ம.தி.மு.க. செயலாளர்கள் பரத் ராஜேந்திரன், மா.வை.மகேந்திரன், சைதை ப.சுப்பிரமணியன், பூ.லோகநாதன், மாவட்ட தே.மு.தி.க. செயலாளர்கள் அனகை முருகேசன், வி.கே.சூர்யா, மாவட்ட விடுதலைச் சிறுத்தைகள் கட்சி செயலாளர்கள் கேது (எ) தென்னவன், வி.சி.கிருபாநிதி, ப.சாமுவேல் எபினேசர், த.தமிழரசன், கனல்விழி, மேனகதேவி மோகன்,

மாவட்ட மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் செயலாளர்கள் பா.சு.பாரதி, இரா.வேல்முருகன், கே.நேரு, ஏ.ராஜ்குமார், பி.வி.சீனிவாசன், மாவட்ட முஸ்லீம் லீக் தலைவர்கள் கே.ஷேக்தாவூத், எஸ்.பீர்முகமது, எஸ்.முகமது பேக், எஸ்.அல்லாபக்ஷ், மாவட்ட ம.ம.க. தலைவர்கள் ஏ.எஸ்.முகம்மது ரபி, டி.முகம்மது யூசுப், எஸ்.கே.ஜாகிர் உசேன், ஜெ.சலீம் கான், மாவட்ட தி.க.தலைவர்கள் பா.முத்தையன், செம்பியன், மாவட்ட எஸ்.டி.பி.ஐ. தலைவர்கள் ஆர்.எம்.கே. மாலிக், எஸ்.முகமது பிலால், ஜாபர் சௌரீப், ஜீபைர் அலி, மாவட்ட ம.ஜ. கட்சி செயலாளர்கள் இரா.காதர், ஜாகீர், மாவட்ட தி.இ.த.பே.செயலாளர் அன்பு, மாவட்ட ஆம்ஆத்மி கட்சி செயலாளர் ராஜசேகர், விவசாயிகள் தொழிலாளர் கட்சி மாநில து.தலைவர் இலட்சுமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் தி.மு.க. துணை பொதுச்செயலாளர் சென்னை மண்டலதி.மு.க. பொறுப்பாளர் அ.இராசா அவர்கள் கலந்துகொண்டு 6சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிடும் தி.மு.க. கூட்டணிக்கட்சி வேட்பாளர்களை அறிமுகப்படுத்தி சிறப்புரையாற்றுகின்றனர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விசுவநாதன், மனிதநேய மக்கள் கட்சி துணை பொதுச் செயலாளர் எம்.யாக்கூப், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் க.பீம்ராவ், மாவட்ட மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முன்னாள் தலைவர் இ.சங்கர் ஆகியோர் சிறப்புரையாற்றினர்கள்.

இக்கூட்டத்தில் சட்டமன்ற தொகுதி வேட்பாளர்கள் தா.மோ.அன்பரசன், அனகை முருகேசன், டாக்டர் கிருத்திகா தேவி, எம்.கே.டி.கார்த்திக், பன்னீர்தாஸ் ஆகியோர் அறிமுகப்படுத்தப்பட்டனர்.

சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் பத்மா ப்ரியா, ரஃபி அகம்மது, பரிதி இளம்சுருதி, எஸ்.எம்.கே.அண்ணாதுரை, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வீ.தமிழ்மணி, தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

வருகிற 23.4.2026 அன்று நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளிலும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் அமோக வெற்றி பெற செய்வதற்காக,

நம்முடைய மாவட்டத்தில் உள்ள தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாவட்ட மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் வட்ட கிளை தலைவர்கள் செயலாளர்கள் நிர்வாகிகள், அனைவரும்ஒன்றிணைந்து, 6 சட்டமன்ற தொகுதிகளிலும் போட்டியிடும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி வேட்பாளர்கள் அனைவரும் வெற்றி கொடி நாட்டிட தேனீக்களை போல சுறுசுறுப்பாக தேர்தல் களப்பணி பணியாற்றி, இரவு பகல் பாராமல் கடுமையாக உழைத்து, வீடு வீடாகச் சென்று அனைவரும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு, தமிழக முதல்வர் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னெடுத்துள்ள "வெல்வோம் ஒன்றாக","ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்" என்ற முத்தான முழக்கங்களை கூட்டணி கட்சியினர் அனைவரும் மனதில் முன்னிறுத்தி,

நடைபெற இருக்கும் சட்டமன்ற தேர்தலில் தி.மு.கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் திராவிட மாடல் நல்லாட்சி மீண்டும் தமிழ்நாட்டில் அமைந்திட,

நம்முடைய மாவட்டத்தில் உள்ள 28.ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வெற்றி வேட்பாளர் தா.மோ.அன்பரசன், 29.திருப்பெரும்புதூர் (தனி) சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் வெற்றி வேட்பாளர் கு.செல்வப்பெருந்தகை அவர்களையும், 30.பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் தே.மு.தி.க. வெற்றி வேட்பாளர் அனகை முருகேசன் அவர்களையும், 31.தாம்பரம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வெற்றி வேட்பாளர் டாக்டர் கிருத்திகா தேவி அவர்களையும், 32.செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வெற்றி வேட்பாளர் எம்.கே.டி.கார்த்திக் அவர்களையும், 33.திருப்போரூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் விடுதலைச்சிறுத்தைகள் வெற்றி வேட்பாளர் பன்னீர்தாஸ் அவர்களையும், பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்வது என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் இணைந்து ஒருமனதாக முடிவெடுக்கிறது.

2026 சட்டமன்றத் தேர்தலில் சிறப்பான முறையில் எதிர்கொண்டு, நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளிலும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை அமோக வெற்றி பெற செய்வதற்காக,

சட்டமன்றத் தொகுதி வாரியாக மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர்கள் அறிமுக கூட்டம் மற்றும் சட்டமன்ற தொகுதி செயல்வீரர்கள் கூட்டம்.

வருகிற 3ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் ஆலந்தூர் தொகுதி செயல்வீரர்கள் கூட்டமும், மாலை 4.00 மணியளவில் திருப்பெரும்புதூர் தொகுதி செயல்வீரர்கள் கூட்டமும்,

4ஆம் தேதி சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் திருப்போரூர் தொகுதி செயல் வீரர்கள் கூட்டமும்,

5ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணியளவில் செங்கல்பட்டு தொகுதி செயல்வீரர்கள் கூட்டமும், மாலை 5.00 மணியளவில் பல்லாவரம் தொகுதி செயல்வீரர்கள் கூட்டமும்

6ஆம் தேதி திங்கள்கிழமை மாலை 4.00 மணியளவில் தாம்பரம் தொகுதி செயல்வீரர்கள் கூட்டமும் நடைபெற உள்ளது என்றும்

இச்செயல்வீரர்கள் கூட்டங்களில் அந்தந்த சட்டமன்ற தொகுதிகளில் அடங்கிய பகுதி, ஒன்றிய, நகர, பேரூர்களில் உள்ள ஒட்டுமொத்த மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் செயல்வீரர்கள் பங்கேற்கும் வகையில் முறையாக அழைப்பிதழை அச்சிட்டு அனைவருக்கும் தந்து

இக்கூட்டங்களில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்கும் வகையில் மிகச் சிறப்பான முறையில் இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை செய்திடுவது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் இணைந்து ஏகமனதாக தீர்மானிக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

நந்திவரம் & கூடுவாஞ்சேரியில் நடைபெற்ற காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் சார்பில் 6 சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுக கூட்டம் மற்றும் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டத்தில் வேட்பாளர்களை கழக துணைப் பொதுச்செயலாளர் சென்னை மண்டல பொறுப்பாளர் ஆ.இராசா அறிமுகப்படுத்தி பொன்னாடை மாலை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். அருகில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் உள்ளார்.

சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க. நகர் வடக்கு பகுதிக்குட்பட்ட 71, 71அ, 72, 72அ, 74, 74அ ஆகிய வட்டங்களின் தேர்தல் பணிமனையை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர் பாபு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், பகுதிக் கழகச் செயலாளர் செ. தமிழ்வேந்தன் கழக வேட்பாளர் கே.எஸ். ரவிச்சந்திரன். பெரம்பூர் ஆர். ராஜன், வட்டக் கழக செயலாளர்கள் மா.ருத்ரமூர்த்தி, பரிமளா சுரேஷ் பாபு, எஸ் புஷ்பராஜ், ஜி. கிருஷ்ணகுமார் எம்.ஏ. டீக்கா எம். இஸட் அபாய் மற்றும் கழக நிர்வாகிகள் தோழமைக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் 2026

### தி.மு.க. தலைமையிலான

### மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

கழக துணைப் பொதுச்செயலாளர் **கனிமொழி கருணாநிதி** எம்.பி. அவர்களின்

# தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

## தலைமைக் கழக அறிவிப்பு!

| தேதி | நேரம் | மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 2.4.2026 | காலை 11 மணி | சிவகங்கை | மானாமதுரை |
| ” | மாலை 4.00 மணி | மதுரை தெற்கு | திருப்பரங்குன்றம் |
| ” | மாலை 6.00 மணி | மதுரை மாநகர் | மதுரை தெற்கு |
| ” | இரவு 8.00 மணி | மதுரை மாநகர் | மதுரை மத்திய |
| 3.4.2026 | காலை 11 மணி | திண்டுக்கல் கிழக்கு | நிலக்கோட்டை |
| ” | மாலை 4.00 மணி | ” | ஆத்தூர் |
| ” | மாலை 6.00 மணி | திண்டுக்கல் மேற்கு | ஒட்டன்சத்திரம் |
| ” | இரவு 8.00 மணி | திண்டுக்கல் கிழக்கு | திண்டுக்கல் |
| 4.4.2026 | காலை 11.00 மணி | திருச்சி தெற்கு | மணப்பாறை |
| ” | மாலை 4.00 மணி | திருச்சி மத்திய | திருவரங்கம் |
| ” | மாலை 6.00 மணி | கரூர் | குளித்தலை |
| ” | இரவு 8.00 மணி | ” | கிருஷ்ணராயபுரம் |
| 5.4.2026 | காலை 11.00 மணி | திருப்பூர் கிழக்கு | காங்கேயம் |
| ” | மாலை 4.00 மணி | திருப்பூர் மத்திய | பல்லடம் |
| ” | மாலை 6.00 மணி | கோவை தெற்கு | சூலூர் |
| 5.4.2026 | இரவு 8.00 மணி | கோவை வடக்கு | கவுண்டம்பாளையம் |
| 6.4.2026 | மாலை 4.00 மணி | சென்னை தெற்கு | மதுரவாயல் |
| ” | மாலை 5.00 மணி | சென்னை கிழக்கு | அம்பத்தூர் |
| ” | மாலை 6.00 மணி | சென்னை வடகிழக்கு | மாதவரம் |
| ” | மாலை 7.00 மணி | சென்னை வடகிழக்கு | திருவொற்றியூர் |
| ” | இரவு 8.00 மணி | சென்னை கிழக்கு | திரு.வி.க.நகர் |
| 7.4.2026 | காலை 10.00 மணி | திருவள்ளூர் மேற்கு | திருத்தணி |
| ” | பகல் 12.00 மணி | இராணிப்பேட்டை | சோளிங்கர் |
| ” | மாலை 4.00 மணி | திருவண்ணாமலை வடக்கு | ஆரணி |
| ” | மாலை 6.00 மணி | திருவண்ணாமலை தெற்கு | போளூர் |
| ” | இரவு 8.00 மணி | ” | கலசப்பாக்கம் |
| 8.4.2026 | காலை 10.00 மணி | கள்ளக்குறிச்சி தெற்கு | ரிஷிவந்தியம் |
| ” | பகல் 12.00 மணி | கள்ளக்குறிச்சி வடக்கு | சங்கராபுரம் |
| ” | மாலை 4.00 மணி | சேலம் கிழக்கு | ஆத்தூர் |
| ” | மாலை 6.00 மணி | சேலம் மத்திய | சேலம் தெற்கு |
| ” | இரவு 8.00 மணி | ” | சேலம் மேற்கு |
| 9.4.2026 | காலை 10.00 மணி | நாமக்கல் மேற்கு | திருச்செங்கோடு |
| ” | பகல் 12.00 மணி | ” | குமாரபாளையம் |
| ” | மாலை 4.00 மணி | ஈரோடு மத்திய | பவானி |
| ” | மாலை 6.00 மணி | ஈரோடு தெற்கு | ஈரோடு கிழக்கு |
| ” | மாலை 7.00 மணி | ஈரோடு தெற்கு | மொடக்குறிச்சி |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 31.03.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன், ஆர்.எஸ்.பாரதி திறந்து வைக்கின்றனர்!

# மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில் 3 இடங்களில் தேர்தல் பணிமனைகள்!

## பகுதிச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி அறிக்கை!

சென்னை, ஏப்.1-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் மூன்று இடங்களில் தேர்தல் பணிமனைகளை இன்று 01.04.2026 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அயப்பாக்கத்திலும் 11.00 மணிக்கு நொளம்பூரிலும் 11.30 மணிக்கு காரம்பாக்கத்தில் தொகுதி தலைமை தேர்தல் பணிமனைகளைசென்னைதெற்குமாவட்ட கழக செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் திறந்து வைக்கிறார்கள்.

இந்நிகழ்வில் மதுரவாயல் வடக்குப் பகுதி செயலாளர் நொளம்பூர் வே.ராஜன், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அயப்பாக்கம் துரைவீரமணி மற்றும் கூட்டணி கட்சிகளின் முன்னணியினர் கலந்து கொள்கின்றனர்.

ஆகவே இந்நிகழ்ச்சிக்கு தொகுதிக்குட்பட்ட அந்தந்த பகுதி.ஒன்றியத்தில் உள்ள தலைமை செயற்குழு.பொதுக்குழு உறுப்பினர்கள். பகுதி . ஒன்றிய கழக நிர்வாகிகள். மாவட்ட அமைப்பாளர்கள். வட்ட கழக. கிளை கழக செயலாளர்கள்.மாவட்ட பிரதிநிதிகள். மாமன்ற உறுப்பினர்கள். மாவட்ட துணை அமைப்பாளர்கள். வட்ட.கிளை கழக நிர்வாகிகள்.அணிகளின் பகுதி. ஒன்றிய.வட்ட அமைப்பாளர்கள்.துணை அமைப்பாளர்கள். பாகநிலை முகவர்கள் ( BLA2 ) BDA க்கள்.கழக முன்னோடிக்கள் மற்றும் கழக தோழர்கள் .கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், தோழர்கள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

இவ்வாறு பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.